சுருக்கம்

தேர்வு வாரியம் – துரிதமாகவும், சரளமாகவும் கணினி இயக்குவதற்கு 6ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு புதிதாக புகுமுக இளநிலை (Pre Junior Grade) தட்டச்சு தேர்வு – நடத்துதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

உயர் கல்வி (பி1) துறை

அரசாணை (நிலை) எண்.422

நாள்:30.9.2008
புரட்டாசி 14,
திருவள்ளுவராண்டு 2039

படிக்கப்பட்டவை:

தொழில் நுட்பக்கல்வி ஆணையரின் கடித எண்.102447/ட்டி4/2008, நாள் 28.4.2008 மற்றும் 28.7.2008.

-----

ஆணை:

பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில், தொழில் நுட்பக்கல்வி ஆணையர், தட்டச்சு இளநிலை (Junior Grade) தேர்வில் கலந்து கொள்ள 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருந்தால் போதுமானது என அரசாணை எண்.275, உயர் கல்வி, 27.9.2001 நாளிட்ட அரசாணையில் நிர்ணயிக்கப்பட்டது. இது நடைமுறை நடத்தப்பட்ட பின்பு தட்டச்சு இளநிலைக்கு மாணவ / மாணவியர்கள் அதிகமாகி மக்களிடையே வரவேற்பு இருந்தது. இதனால் தமிழ்நாட்டில் தட்டச்சு தேர்விற்கு பிற மாநிலங்களைவிட 5 மடங்கு அதிகமாக தேர்வு எழுதுகிறார்கள். தற்பொழுது பள்ளிகளில் இளவயதிலேயே கணினி பயிற்சிக்கு மாணவர்கள் செல்வதால் அவர்களுக்கு தட்டச்சு விசைப் பலகை பயிற்சி (Typewriter Keyboard Operation) தரப்படுமானால், கணினியை திறமையாகவும் வேகமாகவும் இயக்கும் ஆற்றலைப் பெறுவர் என்றும், அதை ஊக்குவிக்க 6ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு புதிதாக புகுமுக இளநிலை (Pre Junior Grade) என்ற தட்டச்சு பிரிவை ஆரம்பித்து அதற்கென்று தேர்வு நடத்தப்படுமானால் அதை மாணவ / மாணவிகள் பெரிதும் பயன்படுத்திக் கொள்வார்கள் என்றும் இதனால் கல்விச் சுமை குறைவாக இருக்கும் பருவத்தில் தட்டச்சு விசைப் பலகை பயிற்சி பெறுவதால் பின்னர் அது கணினி பயிற்சிக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்றும் மேலும், கண்ணால் பார்க்காமல் தட்டச்சு விசைப் பலகை பயிற்சி (Blind Method) அளிக்கப்படுவதால், கணினியை வேகமாகவும் திறமையாகவும் இயக்க மாணவர்களுக்கு பயன்படும் என்றும் இதனால் தட்டச்சு படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் கணிசமாக உயரும் என்றும் தெரிவித்துள்ளார்.

2. தொழில் நுட்பக்கல்வி ஆணையர் மேற்கண்டவற்றை கருத்தில் கொண்டு புகுமுக இளநிலை (Pre Junior Grade) என்ற தட்டச்சு பிரிவை புதிதாக ஆரம்பிக்கவும் அதற்கென்று தேர்வு நடத்தவும் தொழில்நுட்பக் கல்வி ஆணையர் ஒரு கருத்துருவை அரசுக்கு அனுப்பியுள்ளார். அதன் விவரம் வருமாறு :-

(1) இந்த பிரிவில் சேர 6ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(2) Pre Junior Typewriting Speed Grade தேர்வு 25 words Per Minute with the Passage of 250 words (1250 strokes) in 10 minutes என்ற கணக்கில் நடத்தப்படும். Junior Grade தேர்வில் உள்ளது போல Second Paper கிடையாது.

(3) தகுதியுள்ள ஆசிரியர்களிடம் முறையாக பயிற்சி பெறுதல் என்பதால் தட்டச்சு தேர்வு எழுத விண்ணப்பிக்கும் மாணவர்கள் குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு அரசு அங்கீகாரம் அளிக்கப்பட்ட வணிகவியல் பயிலகத்தில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

(4) புகுமுக இளநிலை (Pre Junior Grade) தட்டச்சு தேர்வு வருடத்தில் ஒருமுறை நடத்தப்படும்.

3. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கருத்துருவை கவனமுடன் பரிசீலித்து, அரசு மேற்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் 6ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு புதிதாக புகுமுக இளநிலை (Pre Junior Grade) என்ற தட்டச்சு பிரிவை துவக்கி அதற்கான தேர்வு நடத்துவதற்கு தொழில்நுட்பக் கல்வி ஆணையருக்கு அதிகாரம் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. கணேசன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.
இயக்குனர், பள்ளிக் கல்வித்துறை, சென்னை–6.
தலைவர், தமிழ்நாடு வணிகவியல் பயிலக சங்கம், சென்னை (தொழில்நுட்பக் கல்வி ஆணையர் மூலமாக)

<u>நகல்</u>
தகவல் மற்றும் தொழில்நுட்பத்துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.